**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று **"தெறி"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

அரசாணை (டி) எண். 124

**நாள்: 13.04.2016**
**மன்மத, பங்குனி 31,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. சென்னை உயர் நீதிமன்றத்தின் 07.04.2016–ஆம் நாளிட்ட ஆணை (வழக்கு எண்.13383/2016)
4. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/9043/2016, நாள் 12.04.2016 தேர்வுக்குழு எண்.1/2016–2017.
5. இந்திய தேர்தல் ஆணையத்தின் கடித எண். 437/TN-LA/2016, நாள் 13.4.2016

------

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே 3–இல் படிக்கப்பட்ட ஆணையில் சென்னை உயர் நீதிமன்றம், **"தெறி"** திரைப்படத்தின் தயாரிப்பாளர் வழங்கிய விண்ணப்பத்தினை ஆய்வு செய்து, தேர்தல் ஆணையத்தோடு கலந்தாலோசித்து உரிய ஆணையினை 13.04.2016–அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வெளியிடுமாறு உத்தரவிட்டுள்ளது. மேற்கண்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில், முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையரால் நியமனம் செய்யப்பட்ட ஆறு தேர்வுக் குழு உறுப்பினர்கள் **"தெறி"** திரைப்படத்தினை பார்வையிட்டு பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களும் **"தெறி"** திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்களிக்க பரிந்துரை செய்துள்ளனர்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்று, மேலே 5–இல் படிக்கப்பட்ட கடிதத்தில், இந்திய தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள இசைவின் அடிப்படையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, **"தெறி"** தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசீமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ).

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/4/2016
பிரிவு அலுவலர்.